இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 05.08.2026

# காவிரிக்காக பொங்கிய தி.மு.க.

**பொ**ங்கு தமிழர்க்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். காவிரி உரிமை பறிக்கப்படும் நேரமான இன்று தனது வீறுகொண்ட ஆர்ப்பாட்ட போர்ப் பாட்டை நிகழ்த்திக் காட்டி இருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

காவிரியில் தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய உரிமை கொண்ட நீரைத் தர மறுக்கிறது கர்நாடகம். கடந்த ஜூலை மாதத்தில் வெறும் 0.698 டி.எம்.சி.நீரை மட்டுமே வழங்கி இருக்கிறது கர்நாடகம். கடந்த ஐம்பது ஆண்டுகளில் மிகக் குறைந்த நீரை கடந்த மாதம்தான் பெற்றுள்ளோம். சட்டப்படி பார்த்தால் நமக்கு 31.24 டி.எம்.சி. நீரை கர்நாடகம் வழங்கி இருக்க வேண்டும். தண்ணீர் வழங்கத் தேவையில்லை என்ற துணிச்சல் கர்நாடகாவுக்கு எதனால் வந்தது? இங்குள்ள அரசு மீது அவர்களுக்கு மரியாதையோ பயமோ இல்லை என்பது இதன் மூலம் தெரிகிறது. **‘விஜய்க்கு அரசியல் தெரியாது, அனுபவம் இல்லை’** என்று தனது பேட்டிகளில் தொடந்து சொல்லி வருகிறவர் கர்நாடக முதலமைச்சர் டி.கே.சிவக்குமார்.

‘எங்களுக்கே தண்ணீர் இல்லை’ என்று ஒப்பாரி வைக்கிறது கர்நாடகம். காவிரி ஆற்றில் தமிழ்நாட்டுக்கு 15 நாட்களுக்கு தினமும் 3,500 கன அடி தண்ணீரைத் திறந்து விடும்படி காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் ஆகியவை உத்தரவிட்டும் அதனைச் செயல்படுத்தாமல் இருக்கிறது கர்நாடகம். **இதை விட மோசமாக மேகதாது அணையைக் கட்டியே தீருவோம் என்பதிலும் கர்நாடகம் பிடிவாதமாக இருக்கிறது.**

**இதனைத் தட்டிக் கேட்க முதுகெலும்பு இல்லாத அரசாக முதலமைச்சர் விஜய் அரசு இருக்கிறது. கர்நாடகாவில் மழை பெய்வதால் உபரி நீர் தமிழ்நாடு வருகிறது. உடனே, ‘பார்த்தீர்களா, விஜய் தண்ணீர் கொண்டு வந்துவிட்டார்’ என்று அளக்கிறார்கள். உபரி நீருக்கும் நமக்குத் தர வேண்டிய உரிமை நீருக்கும் வித்தியாசம் காணத் தெரியாத தற்குறிகளுக்கு என்ன பதில் சொல்வது?**

கர்நாடகாவை ஆள்வது காங்கிரஸ் அரசு. இங்கே முதலமைச்சர் விஜய்யும் காங்கிரஸ் தயவில்தான் அந்த நாற்காலியில் இருக்கிறார். இரண்டு தரப்பையும் காங்கிரஸ் தலைமை உட்கார வைத்து பேசலாமே என்று கேட்டால், ‘ராகுல் தமிழ்நாட்டுக்கு வரும் போது மழையைக் கொண்டு வந்துவிட்டாரே’ என்கிறார் காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர். ராகுல் காந்தியை மூன்று மாதத்துக்கு தமிழ்நாட்டிலேயே இருக்க வைக்கிறீர்களா? இந்த மாதிரி எல்லாம் ‘கம்பி கட்டும்’ கதைகளைச் சொல்கிறார்கள். தீர்வுக்கு முயற்சிக்காமல் திருகல் பதில்களைத்தான் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்த நிலையில் கர்நாடக மாநிலத்துக்கு ஒட்டுமொத்த எதிர்ப்பைக் காட்டுவதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று அரசியல் கட்சிகளும், உழவர் பெருமக்களும் த.வெ.க. அரசுக்கு சொல்லியும் அவர்கள் செய்யவில்லை. ‘அனைத்துக் கட்சிக் கூட்டம் தேவையில்லை’ என்று சொல்லி விட்டார்கள். கர்நாடகாவுக்கு போய் சீன் பண்ண நினைத்தார் விஜய். அதுவும் அனைவர் எதிர்ப்பால் செய்யமுடியவில்லை. இப்படி ஏதுவும் செய்யத் திராணியற்ற அரசாக விஜய் அரசு இருக்கிறது.

இந்த நிலையில் ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் உணர்வை வெளிப்படுத்த வேண்டிய கடமையை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தார்கள். மேகதாது அணை கட்டுவதைத் தடுக்கத் தவறிய த.வெ.க. அரசைக் கண்டித்தும், விவசாயக் கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்யக் கோரியும், டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வலியுறுத்தியும், த.வெ.க. அரசைக் கண்டித்தும் தஞ்சாவூரில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தி.மு.க. தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் இளைஞர் அணிச் செயலாளருமான மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் என்றும் உத்தரவிட்டார்கள்.

நேற்றைய தினம் (ஆகஸ்ட் 3) தஞ்சை மண்ணில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின், உழவர் பெருமக்களின் உணர்வை கர்நாடக அரசுக்குத் தெரிவிப்பதாக அமைந்தது. எங்கே திரும்பினாலும் பச்சைத் துண்டுகளாகக் காட்சி அளித்தது. தி.மு.க. விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணித் தோழர்களுடன் கழக உடன்பிறப்புகளும் சாரை சாரையாகக் கலந்து கொண்டு தங்களது உணர்ச்சியை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். தி.மு.க.வின் தோழமைக் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டார்கள். விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளும் ‘இது நமது மேடை’ என்ற உணர்வோடு பங்கெடுத்தார்கள். அனைத்து விவசாய அமைப்பினரும் ஆர்ப்பாட்டத்தில் முழங்கினார்கள்.

**“விவசாயிகள் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்கள் படம் பார்த்து கண்ணீர் விட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஜோக்கர் கூட்டமாக அமைச்சரவை இருக்கிறது. காவிரி டெல்டா மாவட்டம் வறண்டு காட்சி அளிக்கிறது. குறுவையைக் காப்பாற்ற த.வெ.க. அரசால் முடியவில்லை. டம்மி முதலமைச்சராக விஜய் இருக்கிறார். நிர்வாகத் திறனற்ற அரசாக த.வெ.க. அரசு இருக்கிறது”** என்று கடுமையாகக் கண்டித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின். இதுதான் ஒட்டுமொத்த உழவர்களின் உணர்வாக அமைந்துள்ளது.

**“காவிரி பெருக்கெடுக்க வேண்டிய ஆடிப்பெருக்கு நாளில் டெல்டா விவசாயிகள் ஆதங்கம் பெருக்க போராடி வருகிறார்கள். அண்டை மாநிலத்தில் தனது திரைப்படம் ஓடுவதற்காக நம் விவசாயிகளின் வாழ்க்கையையா அடகு வைப்பீர்கள்?”** என்று கேள்வி எழுப்பி இருக்கிறார் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**‘விஜய் நினைத்தார், காவிரியில் தண்ணீர் வருகிறது’ என்று துணை நடிகைகளை வைத்து ரீல்ஸ் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். தொழில் முதலீடுகள் அதலபாதாளத்துக்கு போகிறதே. ஏன் விஜய் நினைக்கவில்லையா? வேறு நினைப்பில் இருக்கிறாரா? தமிழ்நாடு இன்னும் என்னென்ன கூத்துகளை எல்லாம் பார்க்கப் போகிறதோ? இன்னும் எவ்வளவு துன்பத்தைத்தான் அனுபவிக்கப் போகிறதோ?**



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்ற வளாகத்தில் மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டன முழக்கமிட்டனர்.

### எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது:

# நாடாளுமன்ற இரு அவைகளிலும் எதிரொலித்தது!

## கழக உறுப்பினர்கள் கடும் கண்டன முழக்கங்களை எழுப்பினர்!

**புதுடெல்லி, ஆக. 5 -**

**எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து நாடாளுமன்றத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் தொடர் முழக்கம் எழுப்பினர். இதனால், இரு அவைகளும் அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டன.**



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைக் கைது செய்த தமிழ்நாடு அரசின் அராஜக நடவடிக்கைகளைக் கண்டித்து, நாடாளுமன்ற இரு அவைகளிலும் தி.மு.க. உறுப்பினர்கள் முழக்கங்களை எழுப்பினர்.

மக்களவையில் பேசிய தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, காவிரி விவகாரத்தில் போராட்டம் நடத்தியதற்காக, தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தொடர்ந்து அவருக்கு பேச சபாநாயகர் அனுமதி மறுத்ததால், தி.மு.க. எம்.பி.க்கள் அவையின் மையப்பகுதிக்கு வந்து தொடர் முழக்கங்களை எழுப்பினர். இதனால், மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

### மாநிலங்களவை

இதேபோல், மாநிலங்களவையிலும் தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா இப்பிரச்சினையை எழுப்பினார்.

அப்போது பேசிய அவர், தமிழ்நாட்டில் பேச்சு சுதந்திரம் இல்லை, போராட்டம் நடத்திய எதிர்க்கட்சித் தலைவரை கைது செய்துள்ளனர் என்று சாடினார்.

தொடர்ந்து அவருக்கு பேச சபாநாயகர் அனுமதி மறுத்ததால், தி.மு.க. எம்.பி.க்கள் தொடர் முழக்கங்களை எழுப்பினர்.

இதனால், மாநிலங்களவையும் ஒத்திவைக்கப்பட்டது.

### நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் கண்டன ஆர்ப்பாட்டம்!

முன்னதாக, நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பொய்யான வழக்கை பதிவு செய்து தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைக் கைது செய்திருக்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து மக்களவை தி.மு.க. குழு தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில், தி.மு.க. எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, த.வெ.க. அரசின் அராஜகப் போக்கைக் கண்டித்து கண்டன முழக்கம் எழுப்பினர்.

---

### எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது:

# த.வெ.க. அரசின் அப்பட்டமான கோழைத்தனம்!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

**சென்னை, ஆக. 5 -**

**கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் நேற்று வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டது அப்பட்டமான கோழைத்தனம் என்று குறிப்பிட்டுள்ளார்.**



இது தொடர்பாக அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைத் தனிப்பட்ட முறை யில் பழிவாங்க வேண்டும் என்றால், அரசு வழக்குத் தொடுக்கட்டும். நீதிமன்றம் தீர்ப்பளிக்கட்டும்.**

**ஆனால், எதிர்க்கட்சியாக இருக்கும் தி.மு.க.வை எதிர்கொள்ளத் துணிச்சலின்றி, இப்படியான அடக்குமுறைகளில் த.வெ.க. அரசு ஈடுபடுவது சட்டத்திற்குப் புறம்பானது.**

**நாளை (இன்று) தொடங்கவுள்ள சட்டமன்றக் கூட்டத் தொடரில் எதிர்க்கட்சித் தலைவரைப் பங்கேற்க விடாமல் தடுப்பதற்காகவே கைது செய்வது அப்பட்டமான கோழைத்தனம்.**

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

---

### விவசாயிகளின் கவனத்தைத் திசைதிருப்ப

# எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினை கைது செய்வதா?

## தயாநிதி மாறன் எம்.பி. கண்டனம்!

*சென்னை, ஆக. 5 -*

இளைஞரணிச் செயலாளர் - எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கைதைக் கண்டித்தும், அதிகார பலத்தை வைத்து ஜனநாயகத்தை நசுக்கும் விஜய் தலைமையிலான த.வெ.க. அரசைக் கண்டித்தும் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் கடும் கண்டனத்தை தெரிவித்தார்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

ஜனநாயகத்தை நசுக்கும் வகையில், தமிழ்நாடு சட்டப்பேரவையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதற்கு முந்தைய நாளிலேயே, கழக இளைஞரணிச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்த விஜய் தலைமையிலான த.வெ.க. அரசுக்கு கடும் கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவிரி நீர் திறப்பில் ஏற்பட்டுள்ள தாமதம், விவசாயிகளின் தொடர் போராட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் மக்கள் கடும் பாதிப்பை எதிர்கொண்டு வரும் இந்த நேரத்தில், அவற்றிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்பவும், எதிர்க்கட்சியின் குரலை ஒடுக்கவும் முயற்சி செய்கிறது *Take Diversion* கட்சி.

ஜனநாயகத்தில் அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கு இடமுண்டு. ஆனால், அதிகாரத்தைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியை அச்சுறுத்தும் முயற்சிகளுக்கு என்றும் இடமில்லை என்ற தக்க பாடத்தை விரைவில் உணர்வார்கள்.

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.